வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண்.2574/அ2/2020 நாள். 07.01.2021

பொருள்: குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் – 2009 பள்ளிகளுக்கு ஈட்டளிப்பு செய்வதற்கான 2019–20 ஆம் ஆண்டிற்கான கேட்புப் பட்டியலின் படி பெறப்பட்ட தொகை விவரம் கோருதல் – தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.120/எப்/20 நாள்.06.01.2021.

-----

பார்வையில் காணும் தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி சிறபான்மையற்ற தனியார் சுயநிதி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் /மெட்ரிகுலேசன் பள்ளிகள் / மெட்ரிகுலேசன் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் குழந்தைகளுக்கு 2019–2020ஆம் ஆண்டிற்கான கல்வி கட்டணத்தை ஈட்டளிப்பு செய்யும் பொருட்டு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட இறுதி கேட்புத் தொகை பட்டியலின் அடிப்படையில் பள்ளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகளிலிருந்து கோரப்பட்ட தொகைக்கு அதிகமாக / குறைவாக பெறப்பட்ட பள்ளிகள் விவரம் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலூர் வருவாய் மாவட்டம் சார்ந்த மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி முதல்வர் / தாளாளர்கள் 2019–2020 ஆம் ஆண்டிற்கு கோரப்பட்ட கல்வி கட்டண தொகையை காட்டிலும் கூடுதலாக / குறைவாக பெறப்பட்ட பள்ளிகள் இணைப்பில் காணும் படிவத்தில் உரிய விவரங்களை பூர்த்தி செய்து 08.01.2021 அன்று வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஒப்டைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் – 2009ன்படி கல்வி கட்டணத் தொகை வரவு வைக்க கோரும் வங்கி கணக்கு புத்தக முதல்பக்கம் மற்றும் நடைமுறையில் உள்ள பக்கம் நகல் (பள்ளி தாளாளர் / முதல்வர் கையொப்பத்துடன்) இணைத்து அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : படிவம்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
முதல்வர் / தாளாளர்
மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி வேலூர் வருவாய் மாவட்டம்.

நகல்
1.மாவட்டக்கல்வி அலுவலர் வேலூர் – தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2.அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் வேலூர் வருவாய் மாவட்டம்.

நகல்
1.தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர் (ஒபக) வேலூர்

# <u>படிவம்</u>

பள்ளியின் பெயர் :

கைப்பேசி எண் :

UDISE NO. :

**Actual Amount Not Received School as per Final Claim RTE 25% 2019-2020**

| வ .எண் | பள்ளி முகவரி | கோரப்பட்ட தொகை | பெறப்பட்ட தொகை | நிலுவைத் தொகை | கூடுதலாக பெற்ற தொகை | IFSC CODE | BANK A/C NO. | BANK BRANCH |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

(குறிப்பு : வங்கி கணக்கு புத்தக முதல் பக்கம் மற்றும் நடைமுறையில் உள்ள பக்கம் (தாளாளர் / முதல்வர் கையொப்பத்துடன்) நகல்.

தாளாளர் / முதல்வர்.